Utdanningsdirektoratet

# Eksamen

21.11.2013

PSP5564 Tamil nivå III
Elevar og privatistar / Elever og privatister

Nynorsk/Bokmål

# Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timar. |
| **Hjelpemiddel** | Alle hjelpemiddel er tillatne, bortsett frå Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne. |
| **Bruk av kjelder** | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrift eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgåva** | Du skal svare på alle dei tre oppgåvene i oppgåvesettet.<br><br>Du får utteljing for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklege områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i heile oppgåvesettet (samla kompetanse), som skal vurderast. |
| **Kjelder** | விழித்தெழு தை-பங்குனி 2010 ப.18 (Wakeup Jan-March 2010 p18) |
| **Informasjon om vurderinga** | Sjå eksamensrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Eksamensrettleiinga finn du på Utdanningsdirektoratets nettsider. |

## Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timer. |
| **Hjelpemidler** | Alle hjelpemidler er tillatt, bortsett fra Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt. |
| **Bruk av kilder** | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrift eller sitat fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgaven** | Du skal svare på alle de tre oppgavene i oppgavesettet.<br><br>Du får uttelling for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklige områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i hele oppgavesettet (samlet kompetanse) som skal vurderes. |
| **Kilder** | விழித்தெழு தை-பங்குனி 2010 ப.18 (Wakeup Jan-March 2010 p18) |
| **Informasjon om vurderingen** | Se eksamensveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Eksamensveiledningen finner du på Utdanningsdirektoratets nettsider. |

## Oppgåve/Oppgave 1

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ் போன்ற நாடுகளின் பொருளாதார சிந்தனைகளில்; சமூக சிந்தனைகளும், கலாச்சாரச் செயற்பாடுகளும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. குறிப்பாக தமிழர் வாழும் பிரதேசங்களில் கூட்டுக்குடும்பம், சீதனம், பணச்சடங்கு, சீட்டு, அடைவு போன்றவைகள் அவர்கள் வாழும் பகுதியின் முதலீட்டிலும், சேமிப்பிலும், வருமானத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

கூட்டுக்குடும்பம் என்றால் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சின்னம்மா, அண்ணா, அண்ணி போன்றோர் சேர்ந்து வாழும் முறை. கூட்டுக்குடும்பத்தில வாழும் ஆண் திருமணம் செய்தால் அவருடைய மனைவி கூட்டுக்குடும்பத்தில் சேர்ந்து கொள்ள சந்தர்ப்பங்கள் உண்டு. ஒரு பெண் திருமணம் செய்தால் அவருடைய கணவனுடைய கூட்டுக்குடும்பத்தில் புதிய அங்கத்தவராகின்றார். தனிக்குடும்பம் என்னும் போது திருமணம் செய்த ஆணும், பெண்ணும் தனியாக சென்று வாழ்வதாகும். இன்று தனிக்குடித்தனம் செல்வோர் தொகை அதிகரித்துக்கொண்டே சென்றாலும்; உறவுகளின் தொடர்புகள் நெருக்கமாகவே காணப்படுகின்றன. சேர்ந்து வாழ்வதாலும், ஒருவருக்கு ஒருவர் உதவிகள் செய்வதாலும்; பொருளியல்ரீதியாக பல நன்மைகளை அடைகின்றார்கள்.

சீதனம் என்றால் பெண்வீட்டார் தங்கள் பெண்ணின் திருமணத்தின் போது அவர்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்த கொடுக்கப்படும் சொத்து, குறிப்பாக தங்க ஆபரணங்கள், நிலம், வீடு, பணம் போன்றவைகள். பணச்சடங்கு என்பது ஒருவர் தனக்கு பணம் தேவைப்படும்போது உற்றார், உறவினர், நண்பர்கள் போன்றோருக்கு விருந்துபசாரம் ஒன்றை நடத்துவார். அங்கு விருந்தினராக வருபவர்கள் அழைப்பவரின் தேவை அறிந்து பணமாக உதவிசெய்வார்கள். இம்முறை ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் செய்யும் பணவுதவி. ஒருவர் சில நம்பிக்கையான அங்கத்தவர்களைச் சேர்த்து அவர்களுக்கென்று சேமிப்பு ஒன்றை ஏற்படுத்துவதை சீட்டு என்று அழைப்பார்கள். சிலர் தனியாரிடமோ அல்லது ஒரு நிறுவனத்திடமோ தம்மிடம் இருக்கும்

ஆபரணங்கள், காணிகள் போன்றவற்றை அடைவு வைத்து தேவைக்கு பணம் பெறுகின்றார்கள் பின் தம்மிடம்பணம் இருக்கின்றபோது அப்பொருளை மீட்டுக்கொள்கின்றார்கள்.

பொருளாதாரம் என்றாலே மேற்கு சிந்தனைகளான முதலாளித்துவம் அல்லது பொதுவுடைமை அல்லது கலப்புப்பொருளாதாரம் என்று தான் நாம் நினைக்கின்றோம். இவற்றுக்கும் மேலாக நாட்டின் சமூக, கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் பின்னணியும் பின்னிப்பிணைந்து இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழர் வாழும் தெற்காசிய நாடுகளில் தனிமனிதர்களைவிட குடும்பம், சமுதாயம், சம்பிரதாயங்கள் போன்றன பொருளாதார வளர்ச்சியை உருவாகுவதிலும் இயங்குவதிலும் பெரும்பங்கு வகிக்கின்றது. ஒவ்வொரு நாடும் அதனுடைய பாரம்பரியம், கலாச்சாரம், சமுதாய அமைப்புக்களுக்கு ஏற்றவாறு தமது பொருளாதரத் திட்டங்களை அமைத்துக் கொள்கின்றன.

1. கூட்டுக்குடும்பம் என்றால் என்ன? அங்கு வாழும் உறவினர்களின் உறவுமுறைகளை விளக்குக. உதாரணம் பாட்டி: அப்பாவின் தாயாரை பாட்டி என்று அழைப்பார்கள்.
2. சீதனம், பணச்சடங்கு போன்றவற்றால் ஒரு சமூகத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் எவை?
3. சீட்டு, அடைவு போன்றவைகள் இலங்கையில் வாழும் தமிழர்களின் அல்லது நோர்வே தமிழர்களின் பொருளாதார வாழ்வில் எவ்வாறு செயல்படுகின்றது?
4. தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் பற்றிய உங்கள் கருத்து யாது?
5. சமூக அமைப்பு முறை, கலாச்சாரம் என்பவற்றை எவ்வாறு புரிந்து கொண்டுள்ளீர்கள்?

## Oppgåve/Oppgave 2

பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

ஊதாரணம்: <u>**நீல**</u> நிற

__________நிற தொப்பியும் __________ சட்டையும் அணிந்திருந்த __________ பெண் ஒரு கடையின் கண்ணாடி யன்னலுக்கு __________ நின்று விற்பனைக்கு வைத்திருந்த ஒரு __________தொப்பியை பார்த்து__________ பின் கடைக்குள் சென்றவள்; கையில் ஒரு __________பொதியுடன் கடையை விட்டு வெளியே வந்தாள்.

__________கந்தன் __________ கடைக்குச் சென்றான். __________ மாறாக கடைக்குள் ஒரு சிறுவனைத் தவிர வேறு _______________ இல்லை. __________ கடையை சுற்றி பார்த்தான். பின் கந்தன் தனக்கு __________கதைப்புத்தகம் ஒன்றையும் அழகான __________ ஒன்றையும் வாங்க முடிவு செய்தான். பின் கையில் ஒரு பையுடன் கடைக்கு __________ வந்தான்.

நத்தார் நாளன்று இருவரும் கந்தன் வீட்டில் _____________ பரிசுகளை பரிமாறிக் __________ திடீரென ஓர் __________ சத்தம் கந்தனுக்கு __________ பக்கமாக கேட்டது. இருவரும் __________திரும்பிப் பார்த்தார்கள்.

## Oppgåve/Oppgave 3

பகுதி 1 அல்லது பகுதி 2 அல்லது பகுதி 3 ஐ தெரிவு செய்க.

**பகுதி 1**

கீழ்காணும் படத்தை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகள், பெற்றோர், குடும்பம் என்ற பார்வையில் உங்கள் கருத்தை விபரித்து எழுதுக

**பிளவுபட்ட குடும்பம்**




படம் - விழித்தெழு தை-பங்குனி 2010 ப.18

**பகுதி 2**

கீழ்காணும் சித்திரத்தைப் பார்த்து கற்பனைக் கலந்துரையாடல் ஒன்று எழுதுக. பெயர்கள், சம்பவங்கள் உங்கள் தெரிவாக இருக்க வேண்டும்.



**பகுதி 3**

தெற்காசியா நாட்டில் வசிக்கும் உங்கள் பேனாநண்பருக்கு; நோர்வே நாட்டில் பல நாட்டு மக்கள் மத, இன, பேதமின்றி நோர்வே நாட்டு மொழியை கற்று; சேர்ந்து வாழ்வதையும் ஆனால் அதே சமயத்தில் தமது கலாச்சாரங்களையும் பின்பற்றி வருவதையும் விளக்கி ஓர் கடிதம் எழுதுக.

Blank side

Schweigaards gate 15
Postboks 9359 Grønland
0135 OSLO
Telefon 23 30 12 00
utdanningsdirektoratet.no

Utdanningsdirektoratet